## கேள்வி:

# "புதிய ஏற்பாட்டு சபை எப்பொழுது துவங்கிற்று?"

## பதில்:

*வேதாகமத்தின் சபையின் பிறந்த தேதியானது பல வினாக்களுக்கு விடையளிக்கிறது. பிறந்த குழந்தைகளை உறுப்பினராக்குதல், ஓய்வுநாளை ஆசரித்தல், தூபம் காட்டுதல், இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல், பலதார விவாகம், யோவான் ஸ்நானனைப் பின்பற்றுதல், கால்களைக் கழுவுதல், சிலுவையில் தொங்கிய கள்ளனின் எடுத்துக்காட்டைப் பின்பற்றுதல் போன்றவை சரியா தவறா என்று நிர்ணயிப்பதில் அந்தத் தேதி பெரும் பங்கேற்கிறது.*

### சபையே இராஜ்யமாகும்

*சபை என்பதே இராஜ்யமாக உள்ளது என்ற உண்மையை அறிவதற்கு, சபை பிறந்த தேதியைத் தெரிந்து கொள்வது மிக முக்கியமான செயலாகும். "சபை" என்ற வார்த்தையானது, அழைக்கப்பட்ட மக்களாகிய சபை உறுப்பினர்களின் பண்பு களை நேரடியாகச் சுட்டிக்காட்டுகையில், "இராஜ்யம்" என்ற வார்த்தையானது சபையின் அரசாங்கத்தை நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறது. இவ்விரு வார்த்தைகளும் ஒரே அமைப்பையே குறிப்பிடுகின்றன. இவ்வுண்மை பின் வருவனவற்றில் காணப்படுகிறது:*

*(1) இராஜ்யத்தின் இராஜாவே சபையின் தலைவராக இருக்கிறார் (கொலோ. 1:13, 18).*

*(2) இராஜ்யத்தின் விதையே சபையின் விதையாக உள்ளது (லூக். 8:11; 1 தெச. 2:13, 14).*

*(3) இராஜ்யத்தின் திறவுகோல்கள் சபையின் கதவைத் திறக்கப் பயன்பட்டன (மத். 16:19; அப். 2:47ஐக் காண்க).*

*(4) ஒரு பாவியை ஞானஸ்நானமே இராஜ்யத்திற்*

*குள்ளாக்குகிறது, மற்றும் ஒரு பாவியை ஞானஸ்நானமே சபைக்குள்ளாக்கிறது (யோவா. 3:5; 1 கொரி. 12:13).*

*(5) இராஜ்யத்தில் கர்த்தருடைய பந்தி இருப்பதாகக் கூறப்படுகிறது, கர்த்தருடைய பந்தியானது சபையில் முக்கிய பங்காக உள்ளது (லூக். 22:29, 30; 1 கொரி. 10:16).*

*(6) தேவனுடைய இராஜ்யம் அசைவில்லாதது, சபையும் என்றைக்கும் நிலைநிற்கிறதாய் உள்ளது (எபி. 12:28; எபே. 3:20, 21).*

**வரவிருந்த ஒரு சபை**

*இயேசு கி.பி. 30ல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதற்குப் பத்துநாள் பின்பு வந்த ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை(யூதர்களால் "பெந்தெகொஸ்தே" நாள் என்று அழைக்கப்பட்டது)க்கு முன்பு வரை, சபை அல்லது இராஜ்யம் என்பது வரப்போகிற ஒன்றாய் இருந்தது. (வரை படத்தைப் பார்க்கவும்.)*

**முடமான ஒரு சபையல்ல**

*இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்குப் பத்து நாள் பின்பு வந்த ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு, சபை தனது பிறந்தநாளைப் பெற்றிருக்குமென்றால், அது ஒரு முடமான, பயனற்ற சபையாகத்தான் இருந்திருக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு தொடங்கியிருந்தால், சபையானது,*

*(1) யூதர்களை மட்டுமே கொண்டிருந்திருக்கும் (மத். 10:5, 6; முதன்முதலில் புறஜாதியார், கிறிஸ்தவர்களானதை அப். 10ல் தான் காண்கின்றோம்).*

*(2) ஆவியற்றதாய் இருந்திருக்கும் (யோவா. 7:39).*

*(3) இரத்தமற்றதாய் இருந்திருக்கும் (அப். 20:28).*

*(4) தலையற்றதாய் இருந்திருக்கும் (எபே. 1:22, 23; 5:23).*

*(5) கிறிஸ்துவற்றதாய் இருந்திருக்கும் (மத். 16:16-20).*

*(6) வல்லமையற்றதாய், செயல்படாத சபையாய் இருந்திருக்கும் (லூக். 24:49; அப். 1:4ஐக் காண்க).*

*மேற்கண்ட காரணங்களால் இது உண்மையாகிறது.*

**இருக்கின்ற ஒரு சபை**

*பெந்தெகொஸ்தே என்று அழைக்கப்படுகின்ற அந்த*

முக்கியமான வாரத்தின் முதல் நாளுக்குப் பிறகு, சபையைப் பற்றிய குறிப்பு வசனங்கள் நடந்து முடிந்தவைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. (மறுபடியும், வரைபடத்தைப் பார்க்கவும்.) முன்னோக்கியும், பின்னோக்கியும் உள்ள இந்த வசனக் குறிப்புகள் யாவும், கி.பி. 30ல், பெந்தெகொஸ்தே என்ற நாளினையே சுட்டிக்காட்டுகின்றன.

## ஆரம்ப காலத்தின் முக்கியத்துவம்

கி.பி. 30ல், பெந்தெகொஸ்தே நாளன்று பலத்தோடே வரவிருந்த இராஜ்யம் அல்லது சபை(மாற். 9:1; லூக். 24:49)யானது வேதவசனங்களில், "ஆரம்ப" என்று (லூக். 24:47; அப். 11:15) தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்ப நாள் தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளதால், அந்த நாளுக்கு முன்பு இயேசு போதித்தவைகள் எதுவும் இப்பொழுது கட்டுப்படுத்தாது என்று பொருள் அல்ல. மாறாக, ஏறக்குறைய அவர் கூறிய யாவுமே, வரவிருந்த அவருடைய இராஜ்யம் அல்லது சபையை எதிர்நோக்கியும், தமது சீஷர்களை அந்த மகிமையுள்ள அமைப்பின் உறுப்பினர்களாகத் தயாரிக்கும்படியும் இருந்தன. அவருடைய மலைப்பிரசங்கத்தில் இருந்த கொள்கைகள் (மத். 5-7), குற்றம் செய்த ஒருவரிடம் நடந்துகொள்ளும் முறைபற்றிய அவரது உபதேசம் (மத். 18:15-17), மற்றும் விவாகம், விவாகரத்துபற்றிய அவரது உபதேசம் (மத். 19:3-9) ஆகியவைகள் யாவும் மத். 28:20ல் அவர் கொடுத்த பொதுக்கட்டளையில் அடங்கியுள்ளன. அவர் கட்டளையிட்ட யாவையும் நாம் கைக்கொள்ள வேண்டியுள்ளது.

இருப்பினும், இயேசுவின் வாழ்க்கையில் ஒரு பாகமாயிருந்த யூதர்களின் பஸ்கா (மத். 26:18) மற்றும் ஓய்வுநாளை ஆசரித்தல் (லூக். 4:16) ஆகியவை கிறிஸ்தவத்தில் இல்லாதிருக்க வேண்டி யுள்ளது. குறிப்பிட்ட சூழ்நிலையில் கொடுக்கப்பட்ட கட்டளை களான, பையையும் பாதரட்சைகளையும் கொண்டு போகா திருத்தல் (லூக். 10:4), யூதர்களுக்கு மட்டும் பிரசங்கித்தல் (மத். 10:5, 6) மற்றும் இயேசுவே கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லாதிருத்தல் (மத். 16:20) முதலியவற்றிற்கு நாம் கீழ்ப் படிய வேண்டியதில்லை.

அதே போன்று, இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவிய நிகழ்ச்சியானது, சபையின் சடங்காச்சாரமாக்கப்பட

*வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்படவில்லை. சபை நிறுவப்படுவதற்கு முன்னும் (ஆதி. 18:4; லூக். 7:44) அதற்கு பின்னும் (1 தீமோ. 5:10), கால்களைக் கழுவுதல் என்பது இல்லத்தின் உபசரிப்புச் செயலாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அது சபையால் இயற்றப்பட்ட சட்டமாக என்றும் இருந்ததில்லை.*

*இயேசு தமது ஊழிய நாட்களில், அவர் விரும்புகிற எந்த வொரு வகையிலும் பாவங்களை மன்னிப்பதற்கு வல்லமை பெற்றிருந்தார் (மாற். 2:10). அவ்விதமாகவே சிலுவையில் தொங்கிய கள்ளனும் ஞானஸ்நானமின்றியே இரட்சிக்கப் பட்டான், ஆனால் கள்ளனுக்கு ஆறுதல் அளிக்கும் வார்த்தை களைக் கூறிய அதே கர்த்தர், பின்னாளில், எல்லா மக்களும் ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்று கட்டளை யிட்டார் (மாற். 16:15, 16). பாவமன்னிப்புக்கென்று எல்லா மக்களும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டளையானது சபை பிறந்த நாள் அன்று முதன்முறையாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஞானமுள்ள ஒருவர், சபை பிறந்த நாளுக்கு முன்னதாக இரட்சிப்பின் வழியைத்தேடி ஆராயமாட்டார். அவ்வாறு அவர் செய்தால், கள்ளனின் உதாரணத்தைப் பின்பற்றுவதா அல்லது ஆபேலின் பலியைப் பின்பற்றுவதா என்று அறியாதிருப்பார். இதற்கு மாறாக, பெந்தெகொஸ்தே நாளன்று பலத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சபையின் தெளிவான உபதேசத்தைத் தன் வாழ்க்கையில் அவர் சரியான விளைவுகளை ஏற்படுத்தும்படி அனுமதித்தால், இரட்சிக்கப்படச் செய்ய வேண்டிய சரியான செயல்பற்றி அறிவார். பெந்தெகொஸ்தே நாளன்று, வசனத்தைச் சந்தோஷ மாய் ஏற்றுக் கொண்டவர்கள், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக, கள்ளனுக்கு நிகழ்ந்தது போலத் தங்களுக்கும் ஏதேனும் நடக்கலாம் என்ற எதிர்ப்பார்ப்பில் அந்த தேவவசனங் களை வெறுத்து ஒதுக்கவில்லை. மாறாக அவர்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் செய்யப்பட்டனர் (அப். 2:41).*

*புதிய ஏற்பாட்டு சபையின் பிறந்த தேதியின் முக்கியத் துவத்தை ஏற்றுக்கொள்ளத் தவறுவதே, இன்றைய நாட்களில் குழந்தைகளை சபையில் உறுப்பினராக்குவது பரவலாகக் காணப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாகும். பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் மற்றும் இயேசுவின் வாழ்க்கையின் காலம் ஆகியவற்றில், குழந்தைகளை உறுப்பினராக்குவது சரி*

*என்பது உண்மையாக இருக்கும் அதே வேளையில், இயேசு ஸ்தாபித்த சபையில், ஒவ்வொரு உறுப்பினரும் "கர்த்தரை அறிவார்கள்" (எபி. 8:11) என்பதே முக்கியமான கொள்கையாய் இருக்கிறது. இவ்வாறாக, சபையின் பிறந்தநாளன்று, பிரசங்கித்த வசனத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு வயது முதிர்ந்தவர்கள் மட்டுமே ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டனர்.*

*பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக, தூபம் காட்டுதல் மற்றும் இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துதல் ஆகியவை செயல்பட்டன, ஆனால் புதிய ஏற்பாட்டு சபையில் இவ்விரண்டையும் கட்டவும், கட்டவிழ்க்கவும் (மத். 18:18) அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவின் அதிகாரத்தைப் பெற்றிருந்த னர். உண்மை இப்படியிருக்க, சிலர் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பிருந்த பழைய ஏற்பாட்டு ஆராதனைக்குப் பின்சென்று, தூபம் காட்டுதல் மற்றும் இசைக்கருவிகள் பயன்படுத்துதல் ஆகியவற்றை கிறிஸ்தவ ஆராதனையில் கொண்டு வந்து சேர்க்கின்றனர். சிலர் தூபம் காட்டுதலை வெறுத்து ஒதுக்குகின்றனர், ஆனால் இசைக்கருவிகளைக் கொண்டு வருகின்றனர். கி.பி. 30, பெந்தெகொஸ்தே நாளன்று உண்டான சபையின் "ஆரம்பம்" பற்றிய முக்கியத்துவத்தை ஒருவர் உணர்ந்தால், இப்பிரச்சனைகள் தானாகவே தீர்ந்துவிடும்.*

*சிலர், யோவான் ஸ்நானனின் மாபெரும் ஊழியத்தைப் பின்னோக்கிப் பார்த்து, அவரைப் பின்பற்ற முயற்சி செய்கின் றனர். யோவான் எவ்வளவு பெரியவராக இருப்பினும், அவருடையது ஒரு ஆயத்த ஊழியம்தான் (லூக். 1:17; யோவா. 1:15). யோவான் சிரச்சேதம் செய்யப்பட்ட பிறகுதான் புதிய ஏற்பாட்டு சபையின் "ஆரம்பம்" வந்தது. எனவே, ஞானமுள்ள ஒருவர், தேவனுடைய வசனத்தைச் சரியாகப் பகுத்துப் பார்த்து, சபை பிறந்த நாளுக்கு முன்பாகவும், பின்பாகவும் நடந்தவைகளை புதிய ஏற்பாடு தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவதைப் பின்பற்றுவார்.*

*அதே போல, ஞானமுள்ள ஒருவர், எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டு ஓய்வு நாளைப்பற்றி எண்ணுகையில், "நான் அதைப்பற்றி வேதாகமத்தில் பார்க்கிறேன்" என்று கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ள மாட்டார். மாறாக, அதை வேதாகமத்தில் எந்த இடத்தில் காண்கிறோம் என்று பரிசீலனை செய்வார். பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின், தேவனுடைய*

## சபை எப்பொழுது ஆரம்பமாயிற்று?

**கி.மு. 600**
தானியேல் 2:44:
தானியேல் "இராஜ்யம்" பற்றி தீர்க்கதரிசனம் கூறுகிறார்

**கி.பி. 27**
மாற்கு 1:15:
இராஜ்யம் "சமீபமாயிற்று" என்று யோவான் கூறுகிறார்

**கி.பி. 28**
மத்தேயு 6:10:
இயேசு ... "உம்முடைய இராஜ்யம் வருவதாக"

**கி.பி. 29**
மத்தேயு 16:18; மாற்கு 9:1:
இயேசு தமது சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்கிறார்; கேட்பவர்களில் சிலர் அதைப் பார்க்குமட்டும் உயிருடன் இருப்பார்கள்

**கி.பி. 30**
அப். 1:8:
உயிர்த்தெழுந்த இயேசு, அப்போஸ்தலர்களைக் காத்திருக்கும்படி கூறுகின்றார்

அப். 2:1-41:
**பெந்தெகொஸ்தே நாள்**

அப். 2:47:
மனம்மாறியவர்கள் "அவர்களுடன்" சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் ("சபை")

**கி.பி. 40**
அப். 8:1-4:
சபை உபத்திரவப்படுத்தப்படுகின்றது

**கி.பி. 45**
அப். 14:23:
ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்படுகின்றனர்

**கி.பி. 65**
1 தீமோத்தேயு 3:15:
நிலைநாட்டப்பட்ட சபை

**கி.பி. 96**[1]
வெளி. 1:5, 6; 2:1:
நிலை நாட்டப்பட்ட சபைகள்

எதிர் காலத்தில் சபை ஆரம்பமாகும் என்று சுட்டிக்காட்டும் வேத வசனங்கள் →

← கடந்த காலத்தில் சபை ஆரம்பமாயிற்று என்று சுட்டிக்காட்டும் வேத வசனங்கள்

*சபை அதை ஏற்றுக்கொண்டிருப்பதாக அவர் கண்டால், அதையே அவரும் செய்வார். இருப்பினும், ஒரு காலத்தில் அது தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஏற்பட்ட சபையின் பாகமாக அது இல்லாததை அவர் கண்டால் (1 கொரி. 7:11; கொலோ. 2:14-17), அந்த எடுத்துக்காட்டையே அவர், பின்பற்றுவார். கிறிஸ்துவத்தின் ஆரம்பத்தினுடைய முக்கியத்துவம் தமது செயல்களுக்கு வழிகாட்ட அவர் அனுமதிப்பார்.*

## முடிவுரை

*புதிய ஏற்பாட்டு சபையானது எப்பொழுது ஆரம்பித்தது என்பதை ஒருவர் அறியும்போது. மதரீதியாக குழப்பம் விளைவிக்கும் பல கேள்விகள் தீர்வுக்கு வருகின்றன. சத்திய வசனத்தைத் தெளிவாகக் கையாளுவதற்கு இதுவே முக்கிய மான திறவுகோலாகும் (2 தீமோ. 2:15).*

**குறிப்புகள்**

[1]*கிறிஸ்துவின் பிறந்த தேதியை ஏற்றுக் கொள்வதைப் பொறுத்து, தேதிகள் வேறுபடுகின்றன. இதற்கு முந்திய பாடத்தின் அடிக்குறிப்பு 1 ஐப் பார்க்கவும்.*